Koviloor Digital Library

3-3

❀ श्रीः ❀

உ. கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

❀ श्रीराजराजेश्वरी सुप्रभातम् ❀

SRI RAJA RAJESWARI SUPRABHATAM

(Sanskrit & Tamil Transliteration with Meaning)

By

G. A. RAMACHANDRA SASTRI
Jayanagar, Bangalore.

Publisher

Sri Raja Rajeswari Devastanam,
Kailasa Asramam
[illegible]nahalli, Bangalore-39.

[illegible] 1979 [Price Re. 1-00

A. NO: 4220
Q25

Koviloor Digital Library

Koviloor Digital Library

2694
3-3

❀ श्रीः ❀

❀ श्रीराजराजेश्वरी सुप्रभातम् ❀

SRI

RAJA RAJESWARI SUPRABHATAM

(Sanskrit & Tamil Transliteration with Meaning)

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 4220
Q 25

By

G. A. RAMACHANDRA SASTRI
Jayanagar, Bangalore.

Publisher

Sri Raja Rajeswari Devastanam,
Kailasa Asramam
Kanchanahalli, Bangalore-39.

Copyright] 1979 [Price Re. 1-00

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஓம்

ஸ்ரீ ராஜராஜேச்வரீ ப்ரஸன்னு

முகவுரை.

ஸனதன தர்மம் எனப்பெயர் வாய்ந்த நமது ஹிந்து மதம் வேதகாலத்திலிருந்து இன்று வரை பல இடையூறு களைத் தாண்டி சீருடன் நிலைத்து வருகிறது. தர்மம் குறை யும் தருணத்தில் இறைவன் அவதாரம் செய்து அதற்குப் புத்துயிர் கொடுக்கிறார். இவ்வித அவதாரங்கள் விஷ்ணு செய்தவை மட்டும் என்று எண்ணுவது தவறாகும். கடவுளின் தொண்டு செய்பவர் எல்லோருமே அவரு டைய அம்சம் படைத்தவர்கள் எத்தனையோ மஹான் கள் அவ்வப்பொழுது தோன்றி தங்களுடைய மாசற்ற வாழ்வினாலும், உபதேசங்கள் மூலமும் சீடர்களுடைய கூட்டத்திலும் ஆலய நிர்மாண மூலமும் நமது மதத்திற்கு புத்துயிர் அளித்திருக்கின்றனர்.

அவர்களுடைய வாழ்க்கை தைவிகத்தன்மை பொருந் தியது. மற்றவர்களுக்காகவே தாங்கள் பிறந்தவர்கள் ஆவார்கள். இந்த தைவீக ஸமூஹத்தில் தோன்றியவர் ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள், அவர் நமது ஹிந்து மதம் நிலை குன்றாது நீடித்திருக்க வேண்டுமென்று மாபெரும் முயற்சி களைக் கைக்கொண்டுள்ளார். தனது கைலாஸாச்ரமத்தில் வேதாப்யாஸம், ஸம்ஸ்க்ருதக் கல்வி, ஆலய பூஜாவிதி போன்ற நற்காரியங்களுக்குப் பயிற்சி கொடுக்க வஸதி களைச் செய்துவருகிறார்.

ஸமீபத்தில் அன்னை ஸ்ரீ ராஜராஜேச்வரிக்கு மிக அழகான ஆலயம் கட்டி அதற்கு விமரிசையாக பழைய ஸம்ப்ரதாயம் சிறிதும் தவறாது கும்பாபிஷேகம் செய்து வைத்துள்ளார். அன்னையின் சிலாமூர்த்தி கண்ணைக்

Koviloor Digital Library

கவரும் அழகு வாய்ந்தது. தினந்தோறும் விதிப்படியே பூஜைகள் நடந்துவருகின்றன. திரள் திரளாக பக்தர்கள் வந்து வழிபடுகின்றார்கள். இதுதான் மேன்மையான மதப்ரசாரம். இதுதான் நிலைநிற்கும் தெய்விகச் சீர்திருத்தமும்.

ஸ்ரீராஜராஜேச்வரி அம்பாளுக்கு அழகிய ஸுப்ரபாதம் (திருப்பள்ளி எழுச்சி) ஒன்றை G. A. ராமச்சந்திர சாஸ்த்ரி எழுதியுள்ளார். நாற்பது வடமொழிச் செய்யுள் களைக்கொண்டது. எளிய நடையில் அன்னையின் தத்துவங்கள் ததும்ப எழுதப்பட்டிருக்கிறது. சரணாகதி, மங்களாஷ்டகமும் இந்த தத்துவம்தான் என்ன என்பதை ஒருசிறிது ஆராய்வோம்.

இறைவனைத் தந்தை என்று அழைத்தாலும் பொருந் தும்; தாய் என்று அழைத்தாலும் பொருந்தும். அருபஞக இருக்கும் ஆனந்தவடிவத்தைப் பலவாறு புகழ்வது இயல்பு. ஆனால் ஹிந்துமதத்தில் இறைவனைத் தாய் என்று கருதுவது ஒரு தனிச்சிறப்பு. ப்ரம்மம், செய்கை அற்று தனித்திருப்பதை உபநிஷத்தில் ஸத்யம், ஞானம், அனந்தம் என்று வர்ணித்திருக்கிறது. இது சிவம் சுத்த சைதன்யம் கார்யத்தில் ஈடுபடும்பொழுது அம்மை என்று கருதப்படுகின்றது. செய்கையில் வேறுபாடேயன்றி உண்மையில் இரண்டும் ஒன்று. தன் மஹிமையில் தனித்திருக்கும் தன்மை சிவம். உலகம் யாவையும் தானுள ஆக்கலும் நிலைநிறுத்தலும் நீக்கலும் என்ற செயல் புரியும்பொழுது அம்பிகை தாய் என்று கருதப் படுகிறது. இந்த சக்தி இல்லாவிடில் சிவனும் செய்கை அற்றவன் என்று வேதம் கூறுகிறது.

பக்தி செய்வதற்கு தாய்வடிவம் உத்தமமானது. நாம் செய்வது பக்தி. அவள் அளிப்பது அன்பு. சாதாரண மாக உலக இயல்பை எடுத்துக்கொள்வோம். தந்தை கோபம் கொண்டால் குழந்தை தாயிடம் ஓடி ஒளிந்து

Koviloor Digital Library

உ. கோவிலூர்
KOVILOOR
MADALAYAM

கொள்ளும், தாய் கோபம் கொண்டால் அவள் காலையே கட்டிக்கொண்டு கதறும். ஆகவே தாயானவள் கடைசி புகலிடம். ஆகவே ஆனந்தலஹரியில் ஆதிசங்கரர் இதையே கூறியுள்ளார்.

तथापि त्वच्चेतो यदि मयि न जायेत सदयं
निरालम्ब: लम्बोदरजननि कं यामि शरणम् ॥

ஒரு குடும்பத்தில் நான்கு பையன்கள் இருந்தால் அவர்களுள் எவன் எளியவனே அவனிடம் தாய் அதிகம் அன்பு செலுத்துவாள். ஆகவே அன்னைதான் எளியவர் களுக்குப் புகலிடம். தான் என்ற எண்ணமே இல்லாமல் இருக்கும் அன்பு தாயின் அன்பு ஒன்றே.

பசு மிகுந்த பயந்த பிராணி. தன் கன்றைப் புலி தாக்கினுல் தன்னை மறந்து புலியோடு போரிடும். தாயின் அன்பிற்கே வடமொழியில் வாத்ஸல்யம். பசு தனது கன்றுக்கு காண்பிப்பதற்கு அன்பு என்று பெயர். ஆகவே பாமரனைப் பார்த்தாலும் சரி, பண்டிதனைப் பார்த்தாலும் சரி தாயன்புக்கு இணை வேறு இல்லை.

ஸ்ரீ ராஜராஜேச்வரி என்பது அன்னையின் ஆயிரக் கணக்கான நாமரூபங்களில் ஒன்று. இந்த ரூபத்தில் அன்னை சிம்மாஸனத்தில் வீற்றிருப்பவள் ஸ்ரீ மஹாராக்ஞீ ஸ்ரீமத் ஸிம்மாஸனேச்வரீ, லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் அன்னைக்கு இருபக்கமும் வெண்சாமரம் வீசுவார்கள். ''ஸசாமர ரமா வாணீ ஸவ்யதக்ஷிண ஸேவிதா'' அரசர் களுக்கு அரசர்களின் அரசி, அரசையளிப்பவள். (ராஜ்ய தாயினீ) வணங்கியவர்களுக்கு அரசபதவியைக் கொடுப் பவள் (ராஜபீட நிவேசித நிஜாச்ரிதா) படைத்தலைவி (சதுரங்கபலேச்வரீ) அடைந்தவனை சக்ரவர்த்தியாக்கு பவள் (ஸாம்ராஜ்யதாயினீ) சுருங்கச் சொன்னுல் ஸ்ரீ ராஜ ராஜேச்வரீ தத்துவம். பல உலகங்களைப் படைத்துக் காக்கும் தேவியின் தோற்றத்தையே விளக்குவதாகும்.

Koviloor Digital Library

ஒரு அம்சம் தேவியின் சக்தியைக் காண்பிக்கிறது. மற்றொன்று தேவியின் அபாரமான கருணையையும் வேண்டியதைக்கொடுக்கும் தன்மையையும் காட்டுகிறது. இதையே ஆதிசங்கரர் ஸௌந்தர்யலஹரியில் ஹே பவானி! தாஸனென என்னைக் கருணையுடன் நோக்குவாய் என்று புகழ ஆரம்பித்து பவானி என்ற முதல் சொல் முடிவதற்கு முன்பே ஸகல ஸௌபாக்யங்களையும் கொடுத்து விடுகிறாய் என்கிறார்.

ஸுப்ரபாதம் என்பது கோயில்கொண்டிருக்கும் கடவுளை யோக நித்திரையிலிருந்து எழுப்புவதாகும். கடவுளுக்குத் தூக்கம் ஏது? விழிப்பு ஏது? ஸகலஜீவராசிகளைக் காக்கவேண்டி ஓயாது காத்திருக்கும் தைவத்தை இரவில் உறங்கச்செய்து அதிகாலையில் எழுப்புவது என்பது ஒரு மரியாதையே யன்றி வேறில்லை. பூஜையில் பல அம்சங்கள் உள்ளன. ஆகம சாஸ்திரங்கள் இவைகளை விவரமாகத் தீர்மானித்திருக்கின்றன. இவைகளுள் திருப்பள்ளி எழுச்சியும் ஒன்று. அரசனை எழுப்பும் முறையில் பல துதிகளைப்பாடி ஆண்டவனையும் எழுப்புகிறோம். அதிலும் சில சம்பிரதாயங்கள் ஏற்பட்டுள்ளன, காலையின் வர்ணனை, தேவர்களும் மானிடர்களும் தர்சனத்திற்காகக் காத்திருப்பதைக் கூறுதல். குறிப்பிட்ட தைவத்தின் பல குணங்களையும் செயல்களையும் எடுத்துரைக்கும் அம்சங்கள் ஸுப்ரபாதத்தில் அடங்கியுள்ளன. தேவியின் ஸுப்ரபாதத்தில் அவளுடைய மந்திரத்திற்கு முக்யமான இடம் கொடுக்கப்படுகிறது. ஸ்தூலரூபத்தில் அழகு வாய்ந்த வடிவத்தில் தேவியைப் பார்க்கிறோம். அதன் ஸூக்ஷ்ம ரூபத்தில் அக்ஷரங்களாக விளங்குகிறாள். இங்கும் ஸூக்ஷ்ம ரூபமானது இரண்டு வகைப்படும். எல்லா எழுத்துமே அன்னையின் ரூபமாகும். ஆனாலும் அந்த ரூபத்தில் தேவியைப்பார்த்த ரிஷிகள் சில அக்ஷரங்களைப் பொருக்கி அவையே தேவியின் ரூபமென்று கூறுகிறார்கள். இவை தான் தேவியின் மந்திரத் தோற்றம்.

Koviloor Digital Library

ஜபம் செய்வதற்கு இன்றியமையாதவை. ஒரு அக்ஷரத்திலிருந்து (புவனேச்வரீ) இருபத்தெட்டு அக்ஷரங்கள் வரை தேவியின் மந்திரங்களை மிக முக்கியமாக ஸ்ரீ ராஜ ராஜேச்வரிக்கு 16 அக்ஷரங்கள் அடங்கிய ஷோடசாக்ஷரியும், 28 அக்ஷரங்கள் அடங்கிய மஹாஷோடசாக்ஷரியும் எடுக்கப்பட்டுள்ளன. இவைகளைப் புத்தகங்களிலிருந்து படித்துப் பயனில்லை. குருமுகமாகவே தெரிந்துகொள்ள வேண்டும். லலிதாத்ரிசதியோ ராஜ்யத்தைக் கொடுக்கலாம். தன் தலையையானாலும் கொடுக்கலாம். ஆனால் ஷோடசாக்ஷரீ மஹாமந்திரம் கொடுக்கவே கூடாதென்று கூறப்பட்டுள்ளது. அதிக ஆவலும் ஆற்றலும் உள்ள சீடனுக்குமட்டும் உபதேசம் செய்யவேண்டும் என்பது இதன் கருத்து. பரம்பரையாக வந்தால் குருவின் மகிமை சீடனையும் சாறும் என்பது நமது கொள்கை.

ஸ்ரீ G. A. ராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ ராஜ ராஜேச்வரிக்கு இந்த ஸுப்ரபாதத்துடன் சரணாகதிஸ்தவமும், மங்களாஷ்டகமும் இயற்றி பரதேவதைக்குப்பெரிய தொண்டு செய்திருக்கிறார். இதை யாவரும் தினமும் தவறாது படித்து அன்னையின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டும்.

மேலும் அன்னைஸ்ரீராஜராஜேச்வரிக்கு தியானகவசம், ஸஹஸ்ரநாமம், அஷ்டோத்தரம், ஷோடசீ ஸ்துதி எல்லாம் வெளியிடுகிறார். ஸஹஸ்ரநாமம் அவருக்கு பொக்கிஷம் போல காஷ்மீரத்திலிருந்து கிடைத்திருக்கிறது. சீக்கிரமே இவைகளும் வெளிவரும். யாவரும் இன்புற ஸ்ரீ ராஜராஜேச்வரியே சரணம்.

இப்படிக்கு,

9—1—79, பெங்களூர்.

S. Y. Krishnaswamy,
I. C. S. (Retd)

Koviloor Digital Library

Koviloor Digital Library

श्रीः

श्रीराजराजेश्वरी सुप्रभातम्

ஸ்ரீ ராஜராஜேச்வரீ ஸுப்ரபாதம்

कर्णाटाख्यमहीनिवासिजनता भाग्यप्रदैकव्रते
कर्णाटप्रथमान मुख्यनगरीकल्याणपुर्यालये ।
श्रीमत्काञ्चनहल्लिनित्यनिलये कल्याणसम्पत्प्रदे
श्रीराजेश्वरि सर्वशक्तिभरिते ते सुप्रभातं शुभम् ॥ १ ॥

கர்ணுடாக்ய மஹீ நிவாஸி ஜனதா
பாக்ய ப்ரதைகவ்ரதே
கர்ணுட ப்ரதமான முக்யநகரீ
கல்யாணபுர்யாலயே,
ஸ்ரீமத் காஞ்சனஹள்ளி நித்ய நிலயே
கல்யாண ஸம்பத் ப்ரதே
ஸ்ரீ ராஜேச்வரி ஸர்வசக்தி பரிதே
தே ஸுப்ரபாதம் சிவம்.

(க-உரை) ஹே ராஜராஜேச்வரித்தாயே! இப்பாரதத்தில் நீர்வளம், நிலவளம் நிறைந்த கர்ணுடக தேசத்தில் வாழும் ஸகல மக்களுக்கும் ஸகல ஸௌபாக்யங்களையும் அள்ளி அள்ளிக் கொடுப்பதையே தனது விரதமாகக் கொண்டவளே! கர்நாடக தேசத்தின் பிரதான தலைநகரான பூந்தோட்டம் என்றழைக்கப்படும் பங்களுர் என்ற கல்யாணபுரியில் ஆலயமமர்ந்தவளே! காஞ்சனஹள்ளி என்ற பொன்மலையில் (மேருமலையில் போல) அழகிய கோவில்கொண்டவளே! பக்தர்களுக்கு எக்காலமும் நித்யகல்யாண ஸம்பத்துக்களை யளித்துக்காக்கும் கருணையுள்ளங்கொண்ட ஹே ராஜராஜேச்வரித்தாயே! உனக்கு இன்ஞள் ஒரு நன்ஞளாகுக (ஸுப்ரபாதம்) எக்காலமும் எங்களைக் காப்பாற்றுவாயாக.

Koviloor Digital Library

श्रीमत्काञ्चनहल्लिशृङ्गनिलये श्रीकाञ्चनाद्रीश्वरि
कैलासाश्रममन्दिरे श्रितजनक्षेमङ्करी श्रीकरी ।
काञ्चीदामविभूषिते च कमलैः श्रीचम्पकैः अर्चिते
श्रीराजेश्वरि मङ्गलैकनिलये ते सुप्रभातं शुभम् ॥ २ ॥

ஸ்ரீமத் காஞ்சனஹள்ளி ச்ருங்கநிலயே
ஸ்ரீ காஞ்சனுத்ரீச்வரி
கைலாஸாச்ரம மந்திரே ச்ரிதஜன
க்ஷேமங்கரீ ஸ்ரீகரீ,
காஞ்சீ தாம விபூஷிதே ச கமலை:
ஸ்ரீ சம்பகை: அர்சிதே
ஸ்ரீ ராஜேச்வரி மங்களைக நிலயே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) ஹே காஞ்சனஹள்ளியின் சிகரத்தில் அழகிய கோவில்கொண்ட ஜகன்மாதாவே! மஹாமேருவில் இருக்கும் தாயே! தைவமணம் வீசும் கைலாஸாச்ரமத்தில் கோவில் கொண்டவளே, தன்னை அடைந்த மக்களுக்கெல்லாம் ஸர்வக்ஷேமங்களையும் நிறைய ஐச்வர்யத்தையும் கொடுத்துக் காப்பவளே! இடுப்பில் காஞ்சி முதலிய ஆபரணங்கள் நிறைந்தவளே! தினமும் சிவப்பு வெள்ளைத்தாமரை மலர்களாலும் வாசனை மிகுந்த சம்பகம் முதலிய பூக்களாலும் அர்ச்சனை செய்யப் படுபவளே! ஸர்வ மங்களங்களுக்கும் ஒரே இருப்பிடமான ஹே ராஜேச்வரித்தாயே! உனக்கு இந்நாள் ஒரு ஸுப்ரபாதமாகுக. அருள் புரிவாயாக.

Koviloor Digital Library

पूज्यात्रेः तपसा सदा सुमहिते सिंह्याटवीपार्श्वतः
श्रीमत्काञ्चनपत्तने सुखकरे श्रीचम्पकाद्यैःवृते ।
चेतोहारि सुमण्टपे सुकलिते चिन्तामणीमन्दिरे
नित्यानुग्रहकारिणीं त्रिजगतां श्रीमातरं संश्रये ॥ ३ ॥

பூஜ்யாத்ரே: தபஸா ஸதா ஸுமஹிதே
ஸிம்ஹாடவீ பார்ச்வத:
ஸ்ரீமத்காஞ்சனபத்தனே ஸுககரே
ஸ்ரீசம்பகாத்யை: வ்ருதே,
சேதோஹாரி ஸுமண்டபே ஸுகவிதே
சிந்தாமணீமந்திரே
நித்யாநுக்ரஹகாரிணீம் த்ரிஜகதாம்
ஸ்ரீமாதரம் ஸம்ச்ரயே.

(க-உரை) பாற்கடல் நடுவில் கற்பக விருக்ஷக் காட்டில் மணித்வீபத்தில் சிந்தாமணி வீட்டில் பரமசிவ மயமான மஞ்சத்தில் இருக்கும் நீயே அவ்வளவும் ஒருங்கே நிறைந்த இந்த காஞ்சனபுரியின் சிகரத்தில் (அத்ரி மஹரிஷியின் தவத்தால் மஹிமை வாய்ந்ததும் உனது வாஹனமான சிம்மக்காட்டின் பக்கமுள்ளது மான) வசிப்பவர்களுக்கு ஸௌக்யத்தையும் ஆனந்தத் தையுமே யளிக்கும் சம்பகமரங்கள் அடர்ந்த இடத்தில் மனதைக் கவரும் அழகிய புதிய திருக்கோவிலில் சிந்தா மணி கிருஹம் போன்ற கர்ப்ப கிருஹத்தில் கோலங் கொண்டு செங்கோல் செலுத்தித் தனது பக்கர்களுக்கு நித்யானுக்ரஹம் செய்துவரும் மூவுலகங்களுக்கும் தாயான ஹே ராஜராஜேச்வரி! உனக்கு இந்நாள் ஒரு நன்னாளாகுக. மங்களம்

Koviloor Digital Library

माता मङ्गलमङ्गला सुमहिता सिह्मासनाधीश्वरी
श्वेतछत्रसुमेक्षुमण्डितकरा वीरासने सुस्थिता ।
श्रीचक्रैकनिकेतना श्रितजनक्षेमङ्करी सुन्दरी
संराज्ञी जगदम्बिके भगवती ते सुप्रभातं शुभम् ॥ ४ ॥

மாதா மங்களமங்களா ஸுமஹிதா
ஸிம்ஹாஸனாதீச்வரீ
ச்வேதச்சத்ரஸுமேக்ஷுமண்டிதகரா
வீராஸனே ஸுஸ்திதா,
ஸ்ரீசக்ரைகநிகேதனா ச்ரிதஜன
க்ஷேமங்கரீ ஸுந்தரீ
ஸம்ராக்ஞீ ஜகதம்பிகே பகவதீ
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) கீழேழு மேலேழு பதினான்கு உலகங்களுக்கும் தாயே! ஸர்வ மங்களங்களுக்கும் மங்களமே! ஸிம்மாஸனத்தில் அமர்ந்து வீராஸனம் போட்டு வெண்குடை, வெண்சாமரம், கரும்புவில், புஷ்பபாணம், பாசாங்குசம் ஏந்திய திருக்கைகளைக்கொண்ட ஸர்வசக்தி வாய்ந்த மஹாமந்திரங்களால் பலலக்ஷம் தடவைகள் மஹான்களால் உரு ஏற்றப்பட்ட ஸ்ரீசக்ரத்தில் விளங்குபவளே! தன்னை வணங்குபவர்களுக்கு ஸர்வமங்களங்களையும் கொடுத்துக் காப்பாற்றும் உலக அழகியே! மஹாராணியே! ஹே ராஜராஜேச்வரித்தாயே! உனக்கு இன்று ஒரு மங்கள நாளாகுக.

Koviloor Digital Library

वायुः वाति हि शीतलः सुखकरः कादम्बिनी दृश्यते
पूषा उदेति हि चम्पकादितरवः पुष्यन्ति मल्यादयः ।
उद्बुध्यस्व परे कटाक्षय मुदा द्वारिस्थितान् बालकान्
श्रीराजेश्वरि लोकमातः अधुना ते सुप्रभातं शुभम् ॥ ५ ॥

வாயு: வாதி ஹி சீதள: ஸுககர:
காதம்பினீ த்ருச்யதே
பூஷா உதேதி ஹி சம்பகாதிதரவ:
புஷ்ப்யந்தி மல்யாதய:,
உத்புத்யஸ்வ பரே கடாக்ஷய முதா
த்வாரிஸ்திதான் பாலகான்
ஸ்ரீராஜேச்வரி லோகமாத: அதுனா
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) ஹே உலகநாயகியே! விடியற்காலம் குளிர்ந்த இன்பகரமான காற்று வீசுகிறது. ஆகாயத்தில் நீருண்ட மேகங்கள் தோன்றுகின்றன. சூரியனும் உதிக்கப்போகிறான். சம்பகம், மல்லிகை முதலிய வாசனை மலர்கள் மலர்கின்ற வாசனை வீசுகிறது. பக்ஷிகள் கூவுகின்றன. தாயே! நீ உனது யோக நித்திரையில் இருந்து விழித்துக்கொண்டு உனது வாயிலில் உனது சேவைக்காகக் காத்திருக்கும் உனது குழந்தைகளான எங்கள்மீது உனது கருணைக் கடாக்ஷம் வீசுவாயக. ஹே ராஜ ராஜேச்வரித்தாயே! இப்பொழுது இன்று உனக்கு இந்த மங்களகரமான ஸுப்ரபாதம் நன்னாளாகுக. அருள்புரிவாயாக.

Koviloor Digital Library

एका त्वं भुवनत्रिभिश्च वरदे बाले वरेण्ये शुभे
श्रीमत्पञ्चदशाक्षरैश्च ललिते सौभाग्यसंवर्धिनी ।
मान्याष्टाधिकविंशती सुमहिते सिह्मासनाधीश्वरि
मातः सर्वचराचरस्य जगतः ते सुप्रभातं शुभम् ॥ ६ ॥

ஏகா த்வம் புவன த்ரிபி: ச வரதே
பாலே வரேண்யே சுபே
ஸ்ரீமத்பஞ்சதசாக்ஷரை: ச லலிதே
ஸௌபாக்யஸம்வர்தினீ,
மான்யாஷ்டாதிகவிம்சதீ ஸுமஹிதே
ஸிம்ஹாசனாதீச்வரி
மாத: ஸர்வசராசரஸ்ய ஜகத:
தே ஸுப்ரபாதம் சுபம்.

ஸகல புவனங்களுக்கும் தாயான ஹே பரதேவதே! தைவங்களை அணுகுவது மந்திரங்களால் தானாகும். அம் மந்திரங்களும் 1 முதல் 1000 எழுத்துக்களால் அமைந்தவைகளே. இம்மந்திரங்களை முறைப்படி ஜபித்தால் தைவ ஸாக்ஷாத்காரம் ஏற்படும் இவ்வாறே மஹா முனிவர்கள் ஜபித்து தைவங்களைத் திருப்தி செய்தார்கள். ஹே ராஜ ராஜேச்வரித் தாயே! நீயே ஒரு எழுத்தாலான . புவனேச்வரியாகவும் மூன்று எழுத்தாலான பாலா பரமேச்வரி யாகவும், வேண்டிய வரங்களை அளிக்கிறாய். பதினைந்து எழுத்துக்களால் லலிதா பரமேச்வரியாகவும் ஸர்வஸௌ பாக்யங்களையும் அளிக்கிறாய். நீயே இருபத்தெட்டு மஹா மந்திரங்களால் போற்றப்பட்ட மஹாராக்ஞீ ஸிம்மாஸநாதீச்வரி ராஜராஜேச்வரியாகத் தோன்றுகிறாய். இவ்வாறு காக்ஷியளிக்கும் உனக்கு இன்று இந்த மங்கள ஸுப்ரபாதம்.

Koviloor Digital Library

7

या वै पञ्चदशाक्षरीति ललिता लालित्यपूर्णा मुदा
या वै षोडशमन्त्रनित्यमहिता श्रीषोडशी त्रैपुरी ।
अष्टाविंशतिमन्त्रराजमहिता नित्या महाषोडशी
कारुण्यामृतवर्षिणी विजयसे ते सुप्रभातं शुभम् ॥ ७ ॥

யா வை பஞ்சதசாக்ஷரீதி லலிதா
லாலித்யபூர்ணா முதா
யா வை ஷோடசமந்த்ரநித்யமஹிதா
ஸ்ரீஷோடசீ த்ரைபுரீ,
அஷ்டாவிம்சதி மந்த்ரராஜ மஹிதா
நித்யா மஹாஷோடசீ
காருண்யாம்ருதவர்ஷிணீ விஜயஸே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) ஸகல மந்திரங்களுக்கும் தாயான ஹே ராஜராஜேச்வரி! நீயே பஞ்சதசாக்ஷரீ லலிதா பரமேச்வரியாகிறாய். பக்தர்களுக்கு எளிதில் வேண்டியதையளிக்கும் ஷோடச மந்திரங்களால் மஹான்களால் ஜபிக்கப்பட்டு திரிபுரஸுந்தரி ஷோடசேச்வரியாகிறாய். இருபத்தெட்டு (மந்த்ரராஜம் என்ற) மஹாமந்திரங்களால் மஹான்களாலேயே ஜபிக்கப்பட்டு நித்யா பராபட்டாரிகா மஹாஷோடசீச்வரியாகிறாய். இவ்வாறு மஹா ஷோடசேச்வரியான நீயே ராஜராஜேச்வரியாகவும் இருந்து கருணை அமுதத்தை பக்தர்களின் மேல் வர்ஷித்துக்கொண்டே விளங்குகிறாய். இவ்வாறான மஹாராக்ஞியான உனக்கு இந்நாள் ஒரு நன்னாளாகட்டும். எங்களைக் காப்பாற்றுவாயாக.

Koviloor Digital Library

अष्टाविंशतिमान्यनैजमनुभिः भाव्ये महायोगिभिः
अष्टाष्टाख्यकलाभिरावृततनो कष्टौघविध्वंसिनी ।
शिष्टेष्टावधिदानतुष्टहृदये लक्ष्म्यष्टकैः पूरिते
अष्टाभिश्च सुसिद्धिभिः परिवृते ते सुप्रभातं शुभम् ॥ ८ ॥

அஷ்டாவிம்சதிமான்ய நைஜமனுபி:
பாவ்யே மஹாயோகிபி:
அஷ்டாஷ்டாக்யகலாபிராவ்ருததனே
கஷ்டௌகவித்வம்ஸிநீ,
சிஷ்டேஷ்டாவதிதானதுஷ்டஹ்ருதயே
லக்ஷ்ம்யஷ்டகை: பூரிதே
அஷ்டாபி: ச ஸுஸித்திபி: பரிவ்ருதே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) மஹாஷோடசேச்வரி என்கிற ஸ்ரீ ராஜ ராஜேச்வரித்தாயே! நீ உனக்கே உகந்த மஹாமந்திரம் என்ற இருபத்தெட்டெழுத்துக்களால் மஹாயோகிகளால் மனதில் எண்ணப்படுகிருய். இவ்வாறு தியானத்தாலேயே ஆனந்தமடைகிருய். நீயோ பதினெட்டு பூர்ண கலைகளாலும் சூழப்பட்டிருக்கிருய். பக்தர்களின் ஸகல கஷ்டங்களையும் அடியோடு போக்குகிருய். சிஷ்டர்களுக்கு வேண்டியதற்கு மேலாகவே விருப்பங்களை யளித்து ஆனந்தப்படுகிருய். நீயோ அஷ்டலக்ஷ்மிகளாலும் சூழப்பட்டிருக்கிருய். (பக்தர்களுக்கு அஷ்ட லக்ஷ்மீகடாக்ஷம் கிடைப்பதற்காகவேபோல) அஷ்டமகாஸித்திகளாலும் பூர்ணமாக விளங்குகிருய். (தேவியின் அருளால்தான் அஷ்டமஹாஸித்திகளும் கிட்டும் என்பது மந்த்ர தத்வம்) இவ்வாறு ஸர்வசக்தி நிறைந்த ஹே ராஜ ராஜேச்வரி அம்பிகே! உனக்கு இந்த ஸுப்ரபாதம் உறித்தாகுக. அருள் புரிவாயாக.

Koviloor Digital Library

9

रम्ये राजतपर्वतेशललने राकाशशाङ्कानने
तारानायकशेखरे तनुभृतां तापत्रयध्वंसिनी ।
ताम्यन्मध्यलते तटिन्निभतनो तन्त्रीसमालापिनी
श्रीराजेश्वरि राज्यदाननिपुणे ते सुप्रभातं शुभम् ॥ ९ ॥

ரம்யே ராஜத பர்வதேசலலனே
ராகா சசாங்கானனே
தாராநாயக சேகரே தனுப்ருதாம்
தாபத்ரய த்வம்ஸிநீ,
தாம்யன் மத்யலதே தடின்னிபதனோ
தந்த்ரீ ஸமாலாபினீ
ஸ்ரீ ராஜேச்வரி ராஜ்யதான நிபுணே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) அழகுக்கோர் அழகியே! வெள்ளிமலை-யானின் மனையாளே! பூர்ணிமா சந்திரனை ஒத்த முகத்-தழகியே! பிறைச்சந்திரனை தலை ஆபரணமாகக்கொண்டவளே! மானிடர்களுக்கு ஏற்படும் ஆத்யாத்மிக, ஆதிதைவிக, ஆதிபௌதிகமான மூன்று தாபங்களையும் அடியோடு பொசுக்குபவளே! மெல்லிய இடையழகியே! மின்னலை ஒத்த உடல் அமைந்தவளே! வீணையைப் போல மெல்லிய இனிய குரல் வாய்ந்த ஹே ராஜேச்வரித் தாயே! பக்தர்களுக்கு ஸாம்ராஜ்யத்தையே கொடுப்பதில் பெரும் புகழ் வாய்ந்த திவ்யமங்களமூர்த்தியான தாயே! உனக்கு இன்று இந்த ஸுப்ரபாதம். பக்தர்களைக் காப்பாற்றுவாயாக.

Koviloor Digital Library

कैलाशाश्रममन्दिरे कमलभूमुख्यामरेन्द्रस्तुते
कल्याणैकगुणालये कलिमलप्रध्वंसनैकव्रते ।
किंचित् कुञ्चितपादपद्ममधुरे पुण्ड्रेक्षुपाशांकुशे
श्रीराजेश्वरि काञ्चनाद्रिनिलये ते सुप्रभातं शुभम् ॥ १० ॥

கைலாசாச்ரம மந்திரே கமலபூ-
முக்யாமரேந்த்ரஸ்துதே
கல்யாணைக குணாலயே கலிமல-
ப்ரத்வம்ஸநைகவ்ரதே,
கிஞ்சித் குஞ்சித பாதபத்ம மதுரே
புண்ட்ரேக்ஷு பாசாங்குசே
ஸ்ரீ ராஜேச்வரி காஞ்சநாத்ரி நிலயே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) தாயே! தனது சாச்வதமான வாஸஸ்தலமான மேருமலை போன்ற இந்த தங்கமலையில் கைலாஸ ஆச்ர-மத்தில் வஸிக்க விரும்பி வேண்டுமென்றே தானே சிவரத்னபுரி ஸ்வாமியைக் காரணமாகக்கொண்டு அழகிய கோவில்கொண்டு ப்ரம்மா முதலிய தேவகணங்களால் பூஜிக்கப்பட்டும் நித்யகல்யாணியாகிய நீயே பக்தர்களுக்கு ஏற்படும் கலிபாப தோஷங்களை நாசம் செய்வதையே முக்கிய விருதம் பூண்டும் வீராஸனத்திலமர்ந்து சிறிது தனது கால்களைக் கோணிக்கொண்டு (வீராஸனம்) அழகாகவும் கைகளில் புஷ்ப அம்பு, கரும்பு வில், பாசம், அங்குசமேந்தி ஜ்வலிக்கும் ஹே ராஜேச்வரித்தாயே! உனக்கு இன்று இந்த மங்களமான ஸுப்ரபாதம் உறித்தாகுக.

Koviloor Digital Library

श्रीज्ञानाक्षि महेश्वरेश्वरि परे श्रीराजराजार्चिते
श्रीमत्काञ्चनपत्तनाख्यमहितक्षेत्रैकनित्योत्सवे ।
भाग्यात् पूज्यशिवाख्यरत्नपुरिणा सिद्धेन संस्थापिते
श्रीराजेश्वरि रम्यसानुनिलये ते सुप्रभातं शुभम् ॥ ११ ॥

ஸ்ரீ ஞானுக்ஷி மஹேச்வரேச்வரி பரே
ஸ்ரீ ராஜராஜார்சிதே
ஸ்ரீமத் காஞ்சன பத்தனுக்ய மஹித-
க்ஷேத்ரைக நித்யோத்ஸவே,
பாக்யாத் பூஜ்ய சிவாக்ய ரத்னபுரிணு
ஸித்தேன ஸம்ஸ்த்தாபிதே
ஸ்ரீ ராஜேச்வரி ரம்யஸானுநிலயே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) ஆத்மஞானத்தை அளிக்கும் ஹே ஞானேச்வரியே! மஹேச்வரனுக்கும் ஈச்வரியே! குபேரனுல் பூஜிக்கப்படுபவளே! இந்த சாந்தி, அமைதி, நிம்மதி, சூழ்நிலை ஒருங்கே சேர்ந்து விளங்கும் காஞ்சனஹள்ளி என்ற புண்யஸ்தலத்தில் கோவில்கொண்டு நித்யோத்ஸவம் கொண்டாடுபவளே! ஸ்ரீ சிவபுரி குருஸ்வாமியின் அருளாசியைப் பெற்று விளங்கும் பூஜ்யரான சிவரத்னபுரி ஸ்வாமி என்ற தீக்ஷாநாமம் பூண்ட தூய்மை நிறைந்த சித்தபுருஷரால் ஸ்தாபிக்கப்பட்டு அருள்மாறி பொழியும் ஸ்ரீ ராஜேச்வரித்தாயே! உனக்கு இந்நாள் ஒரு நன்னுள் ஆகுக.

Koviloor Digital Library

कल्याणक्षितिमण्डलस्य सहसा कल्याणवृष्टिप्रदे
कल्याणैकगुणार्णवे सुकमलैः श्रीचम्पकैः पूजिते ।
कारुण्यामृतवर्षिणीह नमतां कल्पद्रुमूलस्थिते
श्रीराजेश्वरि भक्तपोषणरते ते सुप्रभातं शुभम् ॥ १२ ॥

கல்யாணக்ஷிதிமண்டலஸ்ய ஸஹஸா
கல்யாண வ்ருஷ்டிப்ரதே
கல்யாணைக குணார்ணவே ஸுகமலை:
ஸ்ரீ சம்பகை: பூஜிதே,
காருண்யாம்ருதவர்ஷிணீஹ நமதாம்
கல்பத்ருமூலஸ்திதே
ஸ்ரீ ராஜேச்வரி பக்தபோஷணரதே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) இந்த கர்ணட நாட்டிற்கே முக்கியமாக பங்களூர் என்று உலகம் போற்றும் அழகிய கல்யாண புரிக்கே நித்யம் கல்யாணமாகிற மழையைப் பொழியும் படி ஏவுபவளே! நித்யகல்யாணி என்ற கல்யாண குணங் களுக்கெல்லாம் ஸமுத்ரம் போன்றவளே! கமலங்கள் சம்பகங்களால் பூஜிக்கப்படுபவளே! தனது இயற்கை யான கருணை என்ற தேவாம்ருதத்தை தன்னை அடைந்த வன் மேல் பொழிபவளே! கல்பக வ்ருக்ஷத்தினடியில் அமர்ந்திருப்பவளே! ஹே ராஜேச்வரித்தாயே! உனக்கு இந்த மங்கள ஸுப்ரபாதம் உறித்தாகுக. அருள் புரிவாயாக

Koviloor Digital Library

13

सम्फुल्लाम्बुजपीठमध्यनिलये सौन्दर्यरत्नाकरे
सौभाग्यैकफलप्रदे च नमतां सौवासिनीतोषिते ।
सौभाग्यादिममङ्गलैकमधुरे सौशील्यसंवर्धिनी
श्रीराजेश्वरि मन्दहासभरिते ते सुप्रभातं शुभम् ॥ १३ ॥

ஸம்புல்லாம்புஜபீட மத்யநிலயே
ஸௌந்தர்ய ரத்நாகரே
ஸௌபாக்யைக பலப்ரதே ச நமதாம்
ஸௌவாஸினீ தோஷிதே,
ஸௌபாக்யாதிம மங்களைகமதுரே
ஸௌசீல்ய ஸம்வர்திநீ
ஸ்ரீ ராஜேச்வரி மந்தஹாஸபரிதே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) நன்கு மலர்ந்த தாமரை பீடத்தின் மத்தியில் அமர்ந்து விளங்குபவளே! அழகுக்கோர் அழகியே! அழகுக்கடலே! தன்னை வணங்குபவர்களுக்கெல்லாம் ஸகல ஸௌபாக்யங்கள் (எட்டு) அளிப்பவளே! ஸுமங்கலிகளையும் கன்னிகைகளையும் பூஜை செய்வதால் தான் ஆனந்தம் அடைபவளே! ஸர்வஸௌபாக்யங்களுக்கெல்லாம் உத்பத்திஸ்தலமாக இருப்பவளே! நல் மனசு, நல்லொழுக்கம் முதலியவை வளர்க்கும், அறம் வளர்க்கும் நாயகியே! ராஜேச்வரித்தாயே! இந்நாள் உமக்கு நன்னாளாகுக.

Koviloor Digital Library

14

विद्युत्कोटिसमप्रभा विजयसे वीणाविनोदस्मिते
विद्यावादजयप्रदे च जपतां वाग्वैखरीवर्धिनी ।
वेदान्तप्रतिपाद्यमान विभवे विश्वैकवन्द्ये अन्नदे
श्रीराजेश्वरि रामणीयकनिधे ते सुप्रभातं शुभम् ॥ १४ ॥

வித்யுத்கோடி ஸமப்ரபா விஜயஸே
வீணாவிநோதஸ்மிதே
வித்யாவாத ஜயப்ரதே ச ஜபதாம்
வாக்வைகரீ வர்தினீ,
வேதாந்த ப்ரதிபாத்யமான விபவே
விச்வைக வந்த்யே அன்னதே
ஸ்ரீ ராஜேச்வரி ராமணீயகநிதே
தே ஸுப்ரபாதம் சுபம்

(க-உரை) கோடி மின்னல்கள் ஒருங்கே சேர்ந்துநின்றாற் போல் ஜ்வலிப்பவளே! கையில் வீணையை ஏந்தி வாசிக்கும் ஸமயம் அடையும் ஆனந்த புன்சிரிப்புடையவளே! தன் மந்த்ரத்தை (16 அல்லது 28 எழுத்துக்கள் கொண்டதை) ஜபம் செய்து ஸித்தி பெற்றவர்களுக்கு எங்கும் ஸபைகளில் ஜயமளிப்பவளே! நாவன்மையை அளித்து ஸபையோர்களை வியக்கச்செய்யும் மஹிமை அளிப்பவளே! ஸகல வேதாந்தங்களாலும் போற்றப் படும் பரம்பொருளே! உலக மக்கள் அனைவராலும் வணங்கப்படும் ஒரே தைவமான ராஜராஜேச்வரித்தாயே! அழகுக்கோர் அழகியே! அழகுச்சுரங்கமே! இன்று உனக்கு இந்த மங்கள ஸுப்ரபாதம்.

Koviloor Digital Library

सन्मन्दस्तिमञ्जुलाधरयुते कारुण्यपूर्णानने
श्रीरत्नाढ्यसुहारकाञ्चिवलये ग्रैवेयकालंकृते ।
नानारत्नविचित्ररत्नमकुटे कस्तूरिका फालिके
श्रीराजेश्वरि सुन्दराङ्गलतिके ते सुप्रभातं शुभम् ॥ १५ ॥

ஸன்மந்தஸ்மித மஞ்சுளாதரயுதே
காருண்ய பூர்ணனனே
ஸ்ரீரத்நாட்ய ஸுஹாரகாஞ்சிவலயே
க்ரைவேயகாலங்க்ருதே,
நாநாரத்ன விசித்ர ரத்னமகுடே
கஸ்தூரிகா பாலிதே
ஸ்ரீ ராஜேச்வரி ஸுந்தராங்க லதிகே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) எக்காலமும் மந்தஹாஸத்தால் மிக அழகிய சிவந்த இரு உதடுகளால் விளங்குபவளே! கருணை ததும்பும் முகமண்டலத்தால் கருணைக்கடலே! உயர்ந்த ஜாதி நவரத்னங்களால் இழைக்கப்பட்ட மாலைகள், ஒட்டியாணம், வளையல்களால் அழகிய தைவமே! கழுத்தில் நவரத்ன மாலைகள் அணிந்திருப்பவளே! பல உயர்ந்த நவரத்னங்களால் விளங்கும் நவரத்ன கிரீடமணிந்தவளே! நெற்றியில் வாசனைமிகுந்த கஸ்தூரி பொட்டை அணிந்து மணம் வீசுபவளே! இவ்வாறு ஸர்வாலங்காரங்கள் நிறைந்து ஸர்வமங்களமூர்த்தியான ஸ்ரீ ராஜேச்வரித்தாயே உனக்கு இன்று இந்த சுபமங்கள தினமாகுக. உனது பாலர்களைக் காப்பாயாக.

Koviloor Digital Library

श्रीकल्पद्रुमसन्निभैः सुरभिलैः श्रीचम्पकैः चन्दनैः
पूर्णे सन्मणिमण्टपे अतिमहिते चिन्तामणी मन्दिरे
पञ्चप्रेतमयाख्यतत्वमहित श्रीशम्भुमञ्चासने
राजन्ती परदेवते तव शुभं श्रीसुप्रभातं शिवे ॥ १६ ॥

ஸ்ரீ கல்பத்ரும ஸ்ன்னிபை: ஸுரபிலை:
ஸ்ரீ சம்பகை: சந்தனை:
பூர்ணே ஸன்மணிமண்டபே அதிமஹிதே
சிந்தாமணீ மந்திரே,
பஞ்சப்ரேத மயாக்ய தத்வமஹித
ஸ்ரீ சம்பு மஞ்சாஸனே
ராஜந்தீ பரதேவதே தவ சுபம்
ஸ்ரீ ஸுப்ரபாதம் சிவே.

(க-உரை) ஹே ஜகதம்பிகே! ஸ்ரீ ராஜராஜேச்வரி! நீ உனக்கே உகந்த கல்பகவ்ருக்ஷங்களுக்குச் சமமான சம்பக, சந்தன மரங்கள் அடர்ந்த மணித்வீபமாகிற அழகிய புதிய மண்டபத்தில் புதிய சிந்தாமணி மந்த்ர மாகிய கர்பக்ருஹத்தில் பஞ்சப்ரம்மமயமான பஞ்ச ப்ரேததத்வங்களாலாகிய பரசிவனுடைய மஞ்சமாகிற ஸுகாஸனத்தில் வீராங்கனை கோலம் கொண்டு அமர்ந்து உலகஸாம்ராஜ்யத்தை ஆக்ஷிபுரியும் மிகமிக பாக்யத்தை அளிக்கும் இக்கோலத்தில் விளங்கும் ஹே ராஜ-ராஜேச்வரி! மஹாராக்ஞியே! உனக்கு இந்த மங்கள மான ஸுப்ரபாதம். எங்களை எக்காலமும் காப்பாயாக.

Koviloor Digital Library

राकापूजनचिन्तितार्थफलदे राकेन्दुबिम्बानने
रोगारातिविनाशनैकनिपुणे राजीवनेत्रोज्वले ।
राजीवासनवल्लभा जलधिजा संवीजिते पार्श्वत:
श्रीराजेश्वरि रत्नदीपसदृशे ते सुप्रभातं शुभम् ॥ १७ ॥

ராகாபூஜன சிந்திதார்த்த பலதே
ராகேந்து பிம்பானனே
ரோகாராதி விநாசனைக நிபுணே
ராஜீவ நேத்ரோஜ்வலே,
ராஜீவாஸன வல்லபா ஜலதிஜா
ஸம்வீஜிதே பார்ச்வத:
ஸ்ரீ ராஜேச்வரி ரத்னதீப ஸத்ருசே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) பௌர்ணமியன்று உன்னை சந்திர பிம்பத்தில் இருப்பவளாக தியானம் செய்து முறைப்படி பூஜை செய்யும் மஹான்களுக்கு நினைத்ததை எல்லாம் கொடுத்தருளும் அன்னையே! பூர்ண சந்திரனை ஒத்த குளிர்ந்த முக மண்டலத்தால் விளங்குபவளே! தனது பக்தர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஏற்படப்போகும் ஸகல மஹாரோகங்களையும் எல்லா விரோதிகளையும்கூட நாசம் செய்வதில் மேன்மையுடையவளே! மலரும் தாமரைக்கண்களுடையவளே! தாமரையில் அமர்ந்த ப்ரம்மாவின் மனைவியான சரஸ்வதியாலும், பார்க்கடலிலுண்டான மஹாலக்ஷ்மியாலும் இரு புறங்களிலும் இரு வெண்சாமரங்களால் வீசப்படும் மஹாராக்ஞியே! உலகமாதாவான ஆக்ஷி பீடத்திலமர்ந்த ஹே ராஜராஜேச்வரித் தாயே! உனக்கு இன்று இந்த மங்களமான ஸுப்ரபாதம் கூறுகிறோம் அருள்வாயாக.

Koviloor Digital Library

श्रीचक्राम्बुजबिन्दुमध्यनिलये सन्तप्तहेमप्रभे
सौवर्णाम्बरकञ्चुकादिललिते सौदामिनीसन्निभे ।
साध्ये सद्गतिदे सदाशिवमहानन्दप्रदे भास्वरे
श्रीराजेश्वरि राजमानतिलके ते सुप्रभातं शुभम् ॥ १८ ॥

ஸ்ரீசக்ராம்புஜ பிந்துமத்ய நிலயே
ஸந்தப்த ஹேமப்ரபே
ஸௌவர்ணம்பர கஞ்சுகாதி லலிதே
ஸௌதாமினீ ஸந்நிபே,
ஸாத்யே ஸத்கதிதே ஸதாசிவ மஹா-
நந்தப்ரதே பாஸ்வரே
ஸ்ரீ ராஜேச்வரி ராஜமானதிலகே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) மஹாமஹிமை வாய்ந்த ஸர்வ சக்தியும் பொருந்திய ஸ்ரீ சக்ரத்தின் மத்தியிலுள்ள பிந்து ஸ்தானத்தில் ஆனந்தமாக அமர்ந்து அருள் புரிபவளே! பழுக்கக் காய்ச்சிய (24 காரட்) பசும் பொன்னிற மேனியால் மேலானவளே! தங்கநூல்களாலேயே இழைக்கப்பட்ட பட்டாடை ரவிக்கையால் அழகியவளே! மின்னல் கொடி போல் மின்னும் மேனியைப்பெற்ற தாயே! ஜப ஹோமங்களால் அடையக்கூடியவளே! பக்தர்களுக்கு எக்காலமும் நற்கதி நற்பயனேயே அளிப்பவளே! ஸாம்ப பரமேச்வரனுக்கு எக்காலமும் மஹானந்தத்தையளிக்கும் ஸுந்தரியே! (புருஷனை மகிழ்விப்பதுதான் குலப்பெண்களின் கடமையாகும்) நெற்றியில் விளங்கும் கஸ்தூரிப் பொட்டாலும் ரத்தினத்தாலும் ஜ்வலிக்கும் ஹே ராஜ ராஜேச்வரித்தாயே! உனக்கு இன்று இந்த மங்கள ஸுப்ரபாதமாகுக.

Koviloor Digital Library

बन्धूकारुणकान्तिपूरिततनो भूषासुरत्नोज्ज्वले
भैरव्यष्टकवेष्टिते च मुनिभिः भावैकवेद्ये अनघे ।
गेहारामधनादिधान्यनिवहान् आतृप्ति सन्दायिके
श्रीराजेश्वरि रञ्जिताखिलजने ते सुप्रभातं शुभम् ॥ १९ ॥

பந்தூகாருண காந்திபூரிததநோ
பூஷாஸுரத்நோஜ்வலே
பைரவ்யஷ்டக வேஷ்டிதே ச முநிபி:
பாவைகவேத்யே அனகே,
கேஹாராம தநாதிதான்ய நிவஹான்
ஆதிருப்தி ஸந்தாயிகே
ஸ்ரீ ராஜேச்வரி ரஞ்ஜிதாகிலஜநே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) மலர்ந்த செம்பரத்தைப்பூவின் ஒளியை ஒத்த மேனியழகியே! நவரத்னுபரணங்களால் விளங்குபவளே! 8 மஹாபைரவி தேவிகளால் எக்காலமும் சூழப் பட்டவளே! மஹாமுனிவர்களாலும் கூட பாவனையால் தான் அறியக்கூடிய மஹாராக்ஞியே! குற்றமற்றவளே! தனது பக்தனுக்கு அழகிய மாளிகை, பூந்தோட்டம், அஷ்ட ஐச்வர்யம் முதலியவைகள், ஆபரணங்கள், நவ தான்யங்களின் மிகுதி இவைகளை போதும் போதும் என்று எண்ணும் வரை அள்ளிக்கொடுக்கும் தாராள மனமமைந்த ராஜேச்வரித்தாயே! உனக்கு இன்று இந்த மங்கள ஸுப்ரபாதம். எங்களுக்கும் இந்நாளை நன்னுளாகச்செய்.

Koviloor Digital Library

शक्तीनां त्रितयेन निर्मिततनो सिद्धयष्टकैःपूरिते
लक्ष्मीनां च तथाष्टभिःपरिवृते वाणीरमा वीजिते ।
सत्ये षोडशसत्कलावलयिते सांम्राज्यदानोद्यते
श्रीराजेश्वरि राजमानमकुटे ते सुप्रभातं शुभम् ॥ २० ॥

சக்தீனும் த்ரிதயேன நிர்மிததனே
ஸித்யஷ்டகை: பூரிதே
லக்ஷ்மீனும் ச ததாஷ்டபி: பரிவ்ருதே
வாணீ ரமா வீஜிதே,
ஸத்யே ஷோடச ஸத்கலா வலயிதே
ஸாம்ராஜ்யதானேத்யதே
ஸ்ரீ ராஜேச்வரி ராஜமான மகுடே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) மூன்று மஹாசக்திகள் ஒவ்வொருதேவரும் ஒரு சக்தியையே பெற்று விளங்குபவர்கள். நீ இச்சா க்ஞான க்ரியா என்ற மூன்று சக்திகளாலானவள். மேலும் அஷ்டமஹாசித்திகளாலும் நிறைந்தவள். பக்தர்களுக்கு அருளவே தன் பக்கத்தில் எட்டு மஹாலக்ஷ்மிகளாலும் சூழப்பட்டிருக்கிருய். மேலும் மஹாலக்ஷ்மி மஹாசரஸ்வதி இவர்களால் வெண்சாமரம் வீசப்படுகிருய். ஹே ஸத்ய ஸ்வரூபிணி! பதினறு நித்யகலைகளாலும் வளைக்கப்பட்டு இருப்பதுடன் திவ்யஜ்யோதியாகத் தோன்றுகிருய். தன்னையண்டியவர்களுக்கு ஸாம்ராஜ்யத்தையே கொடுக்கும் ஹே ஸர்வஸாம்ராஜ்யலக்ஷ்மி! நவரத்னகிரீடமணிந்து விளங்கும் ஹே ராஜராஜேச்வரி! இன்று உனக்கு இந்த மங்கள ஸுப்ரபாதம். எங்களை எக்காலமும் கைவிடாமல் காப்பாற்றுவாயாக (இது தேவியின் ஸ்வரூபதியான மாகலாம்)

Koviloor Digital Library

कामानामथपूरके कमलभूमुख्यामरैः संस्तुते
कामेशाङ्कविहारनित्यरसिके कादम्बवाट्याश्रये ।
कान्तापूजनतुष्टनैजहृदये वन्दारुकल्पद्रुमे
श्रीराजेश्वरि काञ्चनाद्रिनिलये ते सुप्रभातं शुभम् ॥ २१ ॥

காமநாமத பூரகே கமலபூ-
முக்யாமரை: ஸம்ஸ்துதே
காமேசாங்க விஹார நித்யரஸிகே
காதம்பவாட்யாச்ரயே,
காந்தாபூஜன துஷ்டநைஜ ஹ்ருதயே
வந்தாரு கல்பத்ருமே
ஸ்ரீ ராஜேச்வரி காஞ்சநாத்ரி நிலயே
தே ஸுப்ரபாதம் சுபம்.

(க-உரை) ஹே தாயே! தனது பக்தர்கள் விரும்பியதை எல்லாம் குறைவின்றி அருளும் அருள்நாயகியே! பிரும்மா முதலிய ஸகல தேவகணங்களாலும் வணங்கப் படும் பாதகமலங்களால் உலகில் சிறந்து விளங்கு பவளே! காமேச்வரனுடைய மடியில் அமர்ந்து ஆனந்தப் படும் பரம்பொருளே! கதம்பவனச் சோலையில் இளைப் பாறுபவளே! பெண்களையும், கன்னிகைகளையும் பூஜிப்ப வர்களிடம் தன்னை நேரில் பூஜித்ததாகவே எண்ணி எண்ணிய எண்ணங்களையருள்பவளே! தன்னை துதிக்கும் ஜனங்களுக்கு கல்பக விருக்ஷம்போல் விருப்பங்களைப் பூர்த்திசெய்யும் தாராள மனம்படைத்த ஹே ராஜேச்வரித் தாயே! உனக்கு இன்று இந்த மங்களமான ஸுப்ரபாதம். எனது எண்ணங்களை அருள்புரிவாயாக.

Koviloor Digital Library

क्षिप्रप्रसादनिरते क्षमिताखिलागे
क्षेमङ्करि क्षितिधरेन्द्रसुते क्षमाब्धे ।
अक्षीणकोटिसुकृतैः परिदृश्यमाने
श्रीराजराजविनुते तव सुप्रभातम् ॥ २२ ॥

க்ஷிப்ர ப்ராஸாத நிரதே க்ஷமிதாகிலாகே
க்ஷேமங்கரி க்ஷிதிதரேந்த்ரஸுதே க்ஷமாப்தே,
அக்ஷீணகோடி ஸுக்ருதை: பரித்ருச்யமானே
ஸ்ரீ ராஜராஜவிநுதே தவ ஸுப்ரபாதம்.

(க-உரை) தாயே! பக்தன் நினைத்த மாத்திரத்தில் ஓடிவந்து வேண்டியதை எல்லாம் கொடுக்கும் கொடையாளியே! பக்தன் செய்த எல்லா அபசாரங்களையும் மன்னிக்கும் அன்புத் தாயுள்ளம் படைத்தவளே! ஸர்வ க்ஷேமங்களையும் செய்பவளே! மலையரசன் ஹிமவானின் அருந்தவப்புதல்வியே! பொருமைக்கடலே! கோடி மூல மந்திரஜபங்களால் நியமங்களுடன் ஜபிக்கும் மஹனீயர்களுக்கு தனது ஸச்சிதானந்த ஸர்வமங்கள ஸ்வரூபத்தை மின்னல்கொடிபோல ஒரு க்ஷணம் ஸ்வரூப ஸாக்ஷாத்காரம் செய்விக்கும் ராஜராஜனை குபேரனுலுங்கூட தியானிக்கப்படும் ஹே ராஜராஜேச்வரித்தாயே! உனக்கு இன்று இந்த மங்கள ஸுப்ரபாதமாகுக.

Koviloor Digital Library

सूर्याचन्द्रमसौ तथाकुजबुधौ जीवश्च शुक्रः शनिः
राहुः केतुरपीष्ट दैवतगणाः ताराश्च योगादयः ।
दुष्टारिष्टगताः अपीह शुभदाः राजेश्वरीध्यायिनां
श्रीराजेश्वरि सर्वरक्षणपरे ते सुप्रभातं शुभम् ॥ २३ ॥

ஸூர்யாசந்த்ரமஸௌ ததா குஜபுதௌ
ஜீவஸ்ச சுக்ர: சநி:
ராஹு: கேதுரபீஷ்ட தைவதகணா:
தாராஸ்ச யோகாதய:,
துஷ்டாரிஷ்டகதா: அபீஹ சுபதா:
ராஜேச்வரீத்யாயிநாம்
ஸ்ரீ ராஜேச்வரி ஸர்வரக்ஷணபரே
தே ஸுப்ரபாதம் சுபம்.

